Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 589/2025 PW-5**

Name : மருத்துவர் திரு.சீனிவாசன்
Father / Husband name : சங்கரன்
Village : திண்டிவனம்
Age : 36
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.04.2026

Accused present. Both side counsel present. E summon not served. Witness identified Olakkur PS HC 248 Saravanan.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 18.12.2024 அன்று இரவு 08.16 மணியளவில் நான் அவசர சிகிச்சைப்பிரிவில் பணியிலிருந்தபோது திரு.ஜெயக்குமார், 42 வயதுடைய ஆண் நபர் தன்னிச்சையாக மருத்துவமனைக்கு வந்து தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் 18.12.2024 அன்று மாலை 05.40 மணியளவில் விவசாய நிலத்தில் கை மற்றும் பால்கேனால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவரது இடது பக்கத்தலையில் பின்புறத்திலும் வலி இருந்தது, இடது கையில் உள்பகுதியில் 2செ.மீ. அளவிற்கு தோல் கிழிந்திருந்தது ( Superfical laceration ) அவருக்கு முதலுதவி அளித்தோம். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்டக்காயம் சொற்பக்காயம் என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடியக்காயச்சான்று அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காயம்பட்ட நபர் சொன்ன விதத்தில் தாக்கப்பட்டிருந்தால் மேற்படிக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காயத்தின் வயது, நிறம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வலி என்பது

காயம்பட்ட நபர் சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரிதான். மேடானப்பகுதியிலிருந்து கீழே இறங்கும்போது கால் இடறி விழுந்தால் மேற்படிக்காயம் கையில் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலிசார் ஆயுதம் காட்டி கருத்துரை பெறவில்லை என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.